தமிழா! நீ பேசுவது தமிழா 2
அன்னையைத்தமிழ் வாயால் “மம்மி“ என்றழைத்தாய்
அழகுக்குழந்தையை “பேபி“ என்றழைத்தாய் 2
என்னடா தந்தையை “டாடி“ என்றழைத்தாய்
இன்னுயிர்த் தமிழை கொன்று தொலைத்தாய்

தமிழா! நீ பேசுவது தமிழா? 2

உறவை “லவ்“ என்றாய் உதவாத சேர்க்கை
“ஒய்ப்“ என்றாய் மனைவியை பார் உன் போக்கை 2
இரவை “னைட்“ என்றாய் விடியாதுன் வாழ்க்கை
இனிப்பை “ஸ்வீட்“ என்றாய் அறுத்தெறி நாக்கை 2

தமிழா! நீ பேசுவது தமிழா? 2

வண்டிக்காரன் கேட்டான் “லெப்ட்டா? ரைட்டா?“
வழக்கறிஞன் கேட்டான் என்ன தம்பி “பைட்டா?“ 2
துண்டுக்காரன் கேட்டான் கூட்டம் “லேட்டா?“
தொலையாதா நம் தமிழ் இப்படிக் கேட்டா? 2

தமிழா! நீ பேசுவது தமிழா? 2

கொண்ட நண்பனை “பிரெண்டு“ என்பதா?
கோலத் தமிழ்மொழியை ஆங்கிலம் தின்பதா? 2
கண்டவனை எல்லாம் “சார்“ என்று சொல்வதா?
கண்முன் உன் தாய்மொழி சாவது நல்லதா? 2

தமிழா! நீ பேசுவது தமிழா? 2

பாட்டன் கையில “வாக்கிங் ஸ்டிக்கா?“
பாட்டி உதட்டுல என்ன “லிப்ஸிடிக்கா?“ 2
வீட்டில பெண்ணின் தலையில் “ரிப்பனா?“
வெள்ளைக்காரன் தான் உனக்கு அப்பனா?

தமிழா! நீ பேசுவது தமிழா 2